சத்துணவுத் திட்டத்தின்படி பயன்பெறும் 0—3 வயதுத் தொகுதியின்கீழ்வரும் குழந்தைகளுக்கு பால் வழங்கப்படுகிறது. அதன்படி அவர்களுக்குக் கொடுக்கப்படும் ரொட்டியின் விதம் குறைக்கப்பட்டது. 0—1 வயதுத் தொகுதியில் உள்ள குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் 1 துண்டு ரொட்டியும் 200 மி.லி. பாலும் வழங்கப்படுகிறது. 1—3 வயதுத் தொகுதியின்கீழ் உள்ள குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் 2 துண்டு ரொட்டியும் 100 மி.லி. பாலும் வழங்கப்படுகிறது. 3—6 வயதுத் தொகுதியின்கீழ் வரும் குழந்தைகள், கர்ப்பிணிகள் கைக்குழந்தைகளுடன் கூடிய தாய்மார்கள் ஒவ்வொருவருக்கும் 75 கிராம் நிறையுடைய பால், ரொட்டி வழங்கப்படுகிறது. தற்போது பால் வழங்கும் திட்டம் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலும், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் ஒரு பகுதியிலும் செயல்படுத்தப்படுகிறது. மற்ற தொகுதிகளில் வயது வரம்பு இல்லாமல் ஒவ்வொருவருக்கும் 75 கிராம் ரொட்டி வழங்கப்படுகிறது. இத்தொகுதிகளிலும் பால் வழங்கும் திட்டம் நாளடைவில் கொண்டு வரப்படும்.

(இ) மாவட்டங்களிலுள்ள மற்ற வெளியூர் குடிசைப் பகுதிகளில் சிறப்புச் சத்துணவுத்திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட இந்தச் சிறப்பு சத்துணவுத் திட்டம் அவ்விடங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

Quality control for handloom goods

* 11 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any compulsory quality control is being enforced for the handloom goods ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) உள் நாட்டில் பயன்படுத்தப்படுவதற்காக உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகள் தொடர்பாகக் கட்டாயத் தரக்கட்டுப்பாடு எதனையும் அரசு விதிக்கவில்லை. இருப்பினும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உற்பத்தி செய்யப்படுகிற கைத்தறித் துணிகளில் சில இனங்கள் தொடர்பாக, கட்டாய ஆய்வு தரக் குறியீட்டு ஏற்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 2]

(இ) ஏற்றுமதி செய்யப்படுகின்ற 'வண்ணம் மாறும் துணிகள்', அவற்றைச் கொண்டு செய்யப்பட்ட ஆடைகள், எல்லா இடங்களுக்கும் அனுப்பப்படுவதற்கென தயாரிக்கப்படுகின்ற 'எட்வா' வகை (கோடிட்ட) படுக்கை விரிப்புகள் ஆகிய இவையாவும், துணிகள் கப்பலேற்றி அனுப்பப்படும் முன்னர் ஆலைக்குழுவால் வரையறுக்கப்பட்ட தரங்களுக்கிணங்க, கட்டாயமாக ஆய்வு செய்யப்படுவதற்கும், தரக்குறியீடுகள் குறிக்கப்படுவதற்கும் உட்பட்டனவாகும்.

Distribution of yarn for handloom weavers

*12 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have addressed the Centre during 1972 to allow the State Government to take over the distribution of yarn by the Government so as to distribute yarn at fair price to the handloom weavers in this State; and

(*b*) if so, whether any reply has been received by the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(ஆ) இதுவரையில் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை.

கொடைக்கானல் மலைச்சாலை

*13 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் மலைச்சாலையை அகலப்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.